# இரண்டாந் தர நகரங்கள் மற்றும் கிராம சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம் (கடன் இலக்கம் 2758 எஸ்ஆர்ஐ) - 2012

## 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும் இந்த அறிக்கையின் பந்தி 3 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொளள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட, ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்.

நிதிக் கூற்றுக்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 399,646,667 ஆனதுடன் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான திரண்ட செலவினம் ரூபா 457,318,532 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே காட்டப்படுகின்றது.

| விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2012 | 2011 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | 334,789,848 | 18,325,128 | 353,114,976 |
| ஆலோசனை சேவைகள் | 58,670,926 | 39,283,724 | 97,954,649 |
| அதிகரிக்கும் செயற்பாட்டுக் கிரயம் | 4,263,954 | - | 4,263,954 |
| வட்டிக் கட்டணங்கள் (உதவி) | 1,921,939 | 63,013 | 1,984,953 |
| மொத்தம் | 399,646,667 | 57,671,865 | 457,318,532 |

### 2.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிக் கூற்றுக்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கட்டுநிதி நிதியக் கணக்கின் செயற்பாடுகள் மற்றும் அத்திகதியிலுள்ளவாறு அக்கணக்கில் கிடைக்கத்தக்க மீதி என்பன கீழே தரப்படுகின்றன.

| | ஐ. அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| 2012 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | இல்லை | இல்லை |
| கூட்டுக: மீள்நிரப்பல்கள் | 1,663,663 | 205,078,526 |
| வெளிநாட்டு நாணய மாற்று இலாபம் | - | 8,488,800 |

| | | |
|---|---|---|
| | 1,663,663 | 213,567,326 |
| கழி: மீளெடுப்புக்கள் | 604,645 | 78,901,756 |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 1,059,018 | 134,665,570 |

## 3. கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 ஆம் ஆண்டிற்கான நிதியளிப்பு முகவரால் அறவிடப்பட்ட ரூபா 3,205,794 தொகையான வட்டி இலங்கை அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைசாத்திடப்பட்ட கடன் உடன்படிக்கையின்ப வட்டிச் செலவினம் மற்றும் ஏடிபீ கடனாக கணக்கிடப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டிற்காக தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையால் செலுத்தப்பட்ட ரூபா 1,984,953 தொகையான வட்டி இலங்கை அரசாங்கத்திற்கும் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கும் இடையில் கைசாத்திடப்பட்ட குறைநிரப்பு கடன் உடன்படிககையின் படி செயற்திட்டத்தின் வட்டிச் செலவினம் மற்றும் செலுத்த வேண்டிய வட்டி என்பனவாக கணக்கிடப்பட்டிருந்தது. ஆகவே, 2012 ஆம் ஆண்டிற்கான வட்டிச் செலவினம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் என்பன முறையே ரூபா 1,220,841 மற்றும் கூபா 3,205,794 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) தொகை நான்கு ஒப்பந்தகாரர்களிற்கு செலுத்தவேண்டிய ரூபா 64,578,167 கூட்டுமொத்தத் பொதுத் திறைசேரியிடமிருந்து எவ்வித கடப்பாட்டு அல்லது சம்மதத்தைப் பெற்றுக்கொள்ளாமல் பொதுத் திறைசேரியிடமிருந்து பெறவேண்டிய நிதிகளாகவும் இலங்கை அரசாங்கத்திடமிருந்தான பங்களிப்புகளாகவும் கணக்கிடப்பட்டிருந்தன.

### 3.2 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

1993 ஆம் இலக்க கடனின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,162,504,731 பெறுமதியில் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் இறைகின்ற பிரதான விநியோக குழாய் (10.5 கிமீ) மற்றும் உயர்த்தப்பட்ட தண்ணீர் தாங்கி நிர்மாணம் (2 எண்ணிக்கைகள்) 2011 செப்தெம்பர் 30 இல் இரண்டு ஆண்டுகள் தாமதத்துடன் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும், இது மேற்குறிப்பிட்ட முழு வேலையின் நிறைவேற்றலிற்காக ஒரேநேரத்தில் பூர்த்திசெய்யப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டியிருந்த தலைப்பு வேலை மற்றும் தண்ணீர் சுத்திகரிப்பு பொறி என்பவற்றின் நிர்மாண ஒப்பந்தம் பட்டியலிடப்பட்டதலிலும் பார்க்க மிகவும் பின்தங்கியிருந்தமையால் பயன்பாடின்றி இருந்தது. இதன் திருத்தப்பட்ட இலக்கு 2013 யூன் 30 இல் உள்ளவாறு திருத்தப்பட்ட இலக்கின் 75

சதவீதம் காலாவதியாகியிருந்ததென மேலும் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இந்த ஒப்பந்தத்தின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் அத்திகதிவரை 42 சதவீதமாக இருந்தது.

## 4. நிதிசார் மீளாய்வு

### நிதிகளின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படகின்றன.

(அ) மாதாந்த, காலாண்டு மற்றும் அயையாண்டு போன்றன ரீதியாக நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்காட்டுவதன் மூலம் முழுச் செயற்திட்டக் காலத்தையும் மேவி முழுமையான செயல்நடவடிக்கைத் திட்டம் பட்டியலிடப்பட்ட நேர காலத்திற்குள் ஒதுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி செயற்திட்ட நோக்கங்கள் எய்துதலை உறுதிப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட வேண்டியதிருந்தது. எவ்வாறாயினும், அத்தகைய திட்டம் செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

| | ஆசிய அபிவிருத்தி வங்கி | இலங்கை அரசாங்கம் | மொத்தம் |
|---|---|---|---|
| உடன்பட்ட உதவுதொகை (ஐ.அ.டொலர் மில்லியனில்) | 13.3 | 4.87 | 18.17 |
| 2012 திசெம்பர் 31 வரை உள்ளபடியான செலவினம் (ஐ.அ.டொலர் மில்லியனில்) | 2.9 | 0.7 | 3.6 |
| சதவீதமாக நிதிகளின் பயன்பாடு | 21.8 | 14.4 | 19.8 |

(இ) நிதியளிப்புத் திட்டம், மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | **நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை** | | **2012 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு** | **ஆண்டின் போது பயன்படுத்திய நிதிகன்** | **2012 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்ட நிதிகள் (காசு அடிப்படை)** |
|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 13.3 | 1,206.30 | 319.28 | 307.04 | 455.31 |
| இலங்கை அரசாங்கம் | 4.87 | 511.00 | 44.16 | 39.21 | 78.49 |
| மொத்தம் | 18.17 | 1,717.30 | 363.44 | 346.25* | 533.80* |

* மேற்குறிப்பிட்ட தொகைகள் அட்டுறு செலவினங்களின் தாக்கம் காரணமாக இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகைளிலிருந்து வித்தியாசப்படுகின்றன.